Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. STC. No. 703 / 2023

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலசுப்ரமணி | Calling: | வழக்கறிஞர் |
| Father's Name: | ஏகாம்பரம் | Religion: | |
| Village: | கோயம்பேடு | Age: | 64 |
| Taluk: | சென்னை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.06.2025

( எதிரி ஆஜர்.)

கு.சா.த.குறுக்கு விசாரணை

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் சென்னை கோயம்பேடு. என் முகவரியில் குடியிருக்கிறேன் என்றால் முதன்மை சாட்சியிலும், புகாரிலும் கூறியுள்ளதுதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வழக்கறிஞர். நான் எப்போது வழக்கறிஞராக பதிவு செய்தேன் என்றால் 30.04.2008. என்னுடைய வழக்கிறஞர் பதிவு எண். 852/2008. நான் தற்போது எங்கு வழக்கிறஞராக பணிசெய்கிறேன் என்றால் வாய்ப்புகிடைக்கும் இடங்களில் வழக்கிறஞராக பணிசெய்கிறேன் . எந்த வழக்கிறஞர் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன் என்றால் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன். (MHAA). வழக்கை யார் பேரில் தாக்கல் செய்துள்ளளேன் என்றால் ஹரி. அவருடைய தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவர் எங்கு குடியிருக்கிறார்

என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர் என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்றால் என்னோடு பண பரிவர்த்தனை செய்து வந்த காலத்தில் சிமெண்ட் கடை வைத்திருந்தார். எனக்கு அவரை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2020 இல் இருந்து தெரியும்.

எத்தனை முறை அவருக்கும் எனக்கும் பண பரிவர்த்தனை நடந்திருக்கிறது என்றால் ஒரே முறை. எந்த காரணத்திற்காக எப்போது எந்த தேதியில் பணம் வாங்கினார் என்றால் 20.04.2023 ஆம் தேதி சில்லறை கடன்களை அடைப்பதற்காகவும், சிமெண்ட் வியாபாரத்திற்காகவும் கடன் வாங்கினார். அவருக்கு நான் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 20.04.2023 ல் கொடுத்தேன். அவர் எவ்வளவு பணம் கேட்டார் என்றால் 4,00,000 ரூபாய் கேட்டார். அவர் எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்றால் ஒரு நாள் இரண்டு நாள்களுக்கு முன் கேட்டிருப்பார். யாருடன் எந்த இடத்தில், யார் முன்னிலையில் பணம் கேட்டார் என்றால் என்னுடைய வீட்டில் சங்கர் என்பவருடன் வந்து பணம் கேட்டார். சங்கர் என்பவர் யார் என்றால் எனக்கும் , அவருக்கும் நன்பர். சங்கர் என்பவர் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் சென்னை கேஸ் சர்வீஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். சங்கர் மூலமாக தான் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் சரிதான். எதிரியை சங்கர் தான் எனக்கு அறிமுகம் செய்து வைத்தாரா என்றால் சரிதான். எத்தனை வருடத்திற்கு முன்பு அறிமுகம் ஆனார் என்றால் 2020 ல் அறிமுகம் ஆனார். சங்கர் சீட்டு நடத்துபவரா என்றால் இல்லை. கடனை வட்டியாக கேட்டாரா அல்லது கைமாத்தாக கேட்டாரா என்றால் வட்டிக்கு தான் கேட்டார். வருடத்திற்கு 24 சதவீதம் வட்டியாகவும், மாதத்திற்கு 100 க்கு 2 ரூபாய் வட்டிக்கு கேட்டார்.

நான் பலபேருக்கு வட்டிக்கு கொடுப்பேனா என்றால் தெரிந்தவர்களுக்கு மட்டும் என்னிடம் காசு இருக்கும் போது மட்டும் வட்டிக்கு கொடுப்பேன். இந்த நீதிமன்றத்தில் எனது பேரில் எத்தனை காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு வழக்குகள். நான் தான் புகார்தாரர் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். வருமான வரி செலுத்தும் போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளில் கொடுக்கபட்ட பணம் பற்றிய விவரங்களை வருமான வரித்துறைக்கு சொல்லியுள்ளேனா என்றால் 2023-2024 நிதியாண்டிற்கான கணக்கை தாக்கல் செய்துள்ளேன். இன்னொரு வழக்கு சம்மந்தமானது 2024-2025 ஆம் நிதியாண்டிற்கானது

அதை தாக்கல் செய்ய ஜீலை 31 வரை கால அவகாசம் உள்ளதால் இன்னும் தாக்கல் செய்யவில்லை. எந்த தேதியில் எப்போது, யாரை வைத்து காசோலையை கொடுத்தார் என்றால் பணம் பெற்ற 20.04.2023 ஆம் தேதியன்றே மூன்று மாதத்தில் 2 ரூபாய் வட்டியுடன் கொடுப்பதாக சொன்னதால், 4,24,000 ரூபாய்கான காசோலையை 20.07.2023 தேதியிட்டு சங்கர் முன்னிலையில் அன்றே கொடுத்தார். காசோலை எண் எனக்கு தற்போது நினைவில்லை, வங்கி பெயர், INDUS IND BANK. சென்னை. இந்த காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் அவர் பூர்த்தி செய்து கொண்டு வந்தார், அவர் பூர்த்தி செய்தாரா அல்லது வேறுயாராவது வைத்து பூர்த்தி செய்தாரா என்று எனக்கு தெரியாது. எப்படி ரூபாய் 4,24,000 ரூபாய் பூர்த்தி செய்யபட்டது என்றால் முன்கூட்டியே சங்கரும் எதிரியும் பேசி முடிவு செய்து இருந்ததால் பூர்த்தி செய்து எடுத்து வந்து கொடுத்தார்கள்.நான் கொடுத்த பணத்தின் எண்ணிக்கை 500 ரூபாய் தாள் 100 கொண்ட எட்டு கட்டுகள். அந்த பணத்தை நான் வங்கியில் இருந்து எடுத்தேனே அல்லது கையிருப்பா என்றால் நான் நான்கு வங்கிகளில் கணக்கு வைத்துள்ளேன் நான்கு வங்கிகளில் இருந்து எடுத்திருக்கலாம் அல்லது ஒரிரு வங்கிகளில் இருந்து எடுத்திருக்கலாம்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) பாலசுப்ரமணி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K